ஒன்றை அமைப்பதில் சட்டப் பேரவைக்கு இம் மன்றம் தனது இசைவைத் தெரிவிக்கின்றது. மேற்படி குழுவில் பணியாற்றுமாறு மேலவையின் கீழ்க் கண்ட உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் :---

1. திரு. எஸ். டி. ஆதித்தன்
2. திரு. எம். ஆறுமுகசாமி
3. திரு. எம். எம். பக்கர்
4. திரு. எல். பலராமன்
5. திரு. ஏ. ஆர். தாமோதரன்
6. திரு. எம். கே. டி. நடராசன்
7. திரு. கே. ராஜாராம்
8. திரு. ரஸ்ஸல் ராஜ்
9. திரு. இரா. சாம்பசிவம்
10. திரு. வி. வெங்கா"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(3) 1974 ஆம் ஆண்டு, இந்திய முத்திரைத்தாள் (தமிழ் நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/1974).

The Hon. THIRU S. J. SADIQ PASHA: Mr. Chairman, Sir, I move—

"That the Indian Stamp (Tamil Nadu Amendment) Bill @ 1974 (L.A. Bill No. 11 of 1974), as passed by the Assembly, be taken into consideration for making recommendations."

Article 5 of Schedule I to the Indian Stamp Act, 1899 (Central Act 11 of 1899), as in force in this State, relates to levy of stamp duty on agreement or memorandum of agreement. Under

@ 42-44-ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

that Article, agreement or memorandum of agreement relating to sale of bill of exchange or Government security or share in an incorporated company or other body corporate is specifically chargeable with duty. But by virtue of exemption (*a*) under the said Article 5, any agreement or memorandum of agreement for or relating to the sale of goods or merchandise exclusively is exempt from levy of stamp duty. Thus, forward contracts or ready delivery contracts in respect of sale or purchase of commodities in general are not liable to stamp duty. But under the Bombay Stamp Act, 1958 (Bombay Act IX of 1958) stamp duty is leviable also on agreement or memorandum of agreement relating to sale or purchase of the following commodities, namely.—

(i) Scrips, stocks, bonds, debentures, debenture-stocks or other marketable securities;

(ii) Cotton;

(iii) Bullion or

(iv) Oil—seeds;

(v) Yarn;

(vi) Non-mineral oils; and

(vii) Spices.

It has been considered necessary to amend the Indian Stamp Act, 1899, as in force in this State, so as to levy stamp duty on agreement or memorandum of agreement relating to the sale or purchase of the above commodities and also of Hydro-sulphite of Soda. Hence it is proposed to substitute a new Article for Article 5 of Schedule I to the said Act so as to levy stamp duty on forward contracts or ready delivery contracts in respect of sale or purchase of the commodities specified above. In view of the revised consolidated rate proposed in new Article 5, the documents falling under the said Article are proposed to be excluded from the increase of duty under the Tamil Nadu Stamp (Increase of Duties) Act, 1962 (Tamil Nadu Act 8 of 1962) by suitably amending section 2 thereof. The Bill seeks to achieve the above objects.

Sir, I commend the motion for the acceptance of the House.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1974-ஆம் ஆண்டு, இந்திய முத்திரைத்தாள் (தமிழ் நாடு திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/1974) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

THIRU S. T. ADITYAN: Sir, the Stamp Act is a Central Act in which various State Governments have made their own amendments in respect of their respective States. It happens that in our Tamil Nadu State also, extensive amendments have been made to that Act, not in the main portion of the Act but in the Schedule. When we look into the Stamp Act, for instance, in the Civil Court Manual, it is very difficult to collate all the amendments that have been made in the Act. I, therefore, submit that it is very necessary that within the powers we have got, we should make a re-codification of the whole of the Stamp Act as applicable to this State.

Sir, certain other States have made certain amendments suited mainly to their purposes. For instance, Bombay has made an amendment because it is a State where hydros is an important commodity because it is a chemical used in dyeing. In the same way, if we are to follow the amendments made in other States one by one, it would be difficult to get a whole picture in our State. Considering the conditions and circumstances of our State, it would be necessary to take up the codification or re-codification of the Stamp Act. That is the first observation I would make

Secondly, I would like to make an observation with regard to debentures, scrips etc. Regarding the share certifications, under the present law, not only we have to pay stamps for the transfer, but we have also to pay another sum for getting a succession certificate. Succession certificate has been prescribed not only for debts owing to the deceased but also for share certificates which stood in the name of the deceased. The getting of a succession certificate is a very costly affair. I would request the Government to see whether the taking of the succession certificates for share

certificates could be obviated. In the modern circumstances when trade and other things have increased, there will be more and more transfers of share certificates and shares will change hands and it should be made very easy to deal in shares. Of course, national interests require that the transfer of shares should be controlled and the Government should have necessary powers. That is one thing. But to saddle the son of the deceased with the duty of taking a succession certificate in the case of shares standing in the name of his father, I think, is not proper. I submit that the Government should make a fresh look into that point.

I would like to make one more point and with that, I vnish my speech. The word 'spices' is rather covering a big area. For instance, I have seen certain text-books in which chillies and ginger have been described as 'spices'. these things are also considered along with the spices. The wording 'spices' connotes cloves, cardamom and such other things. But it is rather very extensive. I submit to the Government that when a codification of the Act is made, a re-definition of the word will have to be made in respect of 'spices'. With this, Sir, I close my speech.

Mr. CHAIRMAN: I think chillies are not spices. What are the things that come under the definition of 'spices'?

THIRU S. T. ADITYAN: It will have to be considered. I am only saying that chillies cannot be considered by Tamilians as spices, bot are classed as spices. Pepper is generally considered to be one of the spices. Because of the various interpretations, the Government should come up with proper proposals and see that a correct definition is given. With these words, Sir, I commend the Bill to this Hon. House.

(பிற்பகல் 4-50)

* திரு. கே. ராஜாராம்: தலைவர் அவர்களே, ஸடாம்ப் ஆக்டுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்தத் திருத்தத்தில் சில பொருள்களைப் பொறுத்த மட்டில் செய்துகொள்ளக்கூடிய அக்ரிமென்ட்கள் சம்பந்தமானவைகளில் ஸ்டாம்ப் டியூட்டி கட்ட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. சாதாரணமாக எந்த அக்ரிமென்ட் எழுதினாலும் ஸ்டாம்ப் டூட்டி கட்டவேண்டிய அவசியம்

இருந்தால், இன்னும் நலமாக இருக்கும். ஃபார்வேர்டு கான்ட்ராக்ட்ஸ் செய்யக் கூடிய பொருள்களைமட்டும் இதிலே உட்படுத்தியிருப்பதாகத் தெரிகிறது. மற்ற அக்ரிமென்ட்களின் நிலவரம் என்ன? வேறு பல பொருள்களின் பேரில் அக்ரி மென்ட் எழுதிக்கொள்கிறார்கள். அவற்றுக்கு ஸ்டாம்ப் டூட்டி இல்லையா என்று நான் அறிய விரும்புகிறேன். பம்பாய்ச் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிற பொருள்களாகிய stocks, bonds, debentures, cotton, bullion or specie, oilseeds, yarn, non-mineral oils and spices ஆகியவை தவிர வேறு பல தொழில்களிலும் அக்ரிமென்ட் எழுதிக்கொள்கிறார்கள். உதாரணமாக கட்டிடங்கள், வீடுகள் முதலியவற்றை இப்பொழுது நூதனமான வகையில் அக்ரிமென்ட் எழுதிக்கொண்டே, அதில் வியாபாரம் செய்ய ஆரம்பித்திருக் கிறார்கள். அதையெல்லாம் ஏன் இதில் கட்டுப்படுத்தக் கூடாது என்று நான் அறிய விரும்புகிறேன். கிரயப்பத்திரம் எழுதாமல் வெறும் அக்ரிமென்ட் எழுதிக்கொண்டே நமது அரசாங்கத்தை ஒரு பத்து ஆண்டுகளுக்கு முன்னால் ஏமாற்றிய ஒரு விஷயம், அது பப்ளிக் அக்கவுன்ட்ஸ் கமிட்டிக்கு அனுப்பப் பட்டு, இப்பொழுது பேரவையின் அவைமுன்னவராக இருக்கிற நமது கல்வி அமைச்சர் அவர்கள் பொதுக் கணக்குக் குழுத் தலைவராக இருந்தபோது, பரிசீலிக்கப்பட்ட ஒரு விஷயத்தை நான் சொல்கிறேன். அதில் வெறும் அக்ரிமென்ட்டை வைத்தே அரசாங்கத்தை ஒரு லட்ச ரூபாய் வரை ஏமாற்றி, பின்னால் அவர்கள் கிரயம் எழுதிக்கொண்டு, அரசாங்கத்திற்கு மாற்றுக் கிரயம் எழுதிக்கொடுத்து பணம் சம்பாதித்திருக்கிறார்கள். இம்மாதிரிக் காரியங்களெல்லாம் இருக்கும்போது கட்டிடங்களை ஏன் இதில் கொண்டுவரக் கூடாது என்று நான் அறிய விரும்புகிறேன். ஃபார்வேர்டு கான்ட்ராக்ட் இருப்பதைமட்டும் சொல்வதில் பிரயோஜனம் இல்லை. பலவிதமான ஏமாற்றங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. ஸ்டாம்ப் டூட்டி ஏமாற்றம் ஏராளமாகச் செய்கிறார்கள். கட்டிடங்களை அக்ரிமென்ட் செய்து எழுதக் கூடிய வியாபாரம் பெரிய நகரங்களில் நடந்துகொண்டிருக்கிறது. இது கிராமங்களில் நடக்க முடியாது. அதையும் ஏன் இதில் உட்படுத்தக்கூடாது என்று விளக்கும்படி அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

பொதுவாக இது நல்ல மசோதா. அரசாங்கத்தை ஏமாற்றாமல் தடுப்பதற்குக் கொண்டுவந்திருக்கும் இந்த மசோதாவை நான் வரவேற்கிறேன். ஆனால் இந்தச் சரக்குகளைக் காட்டிலும் இன்னும் மோசமான பல காரியங்கள் இருக்கின்றனவே, அவற்றையும் ஏன் இதில் உட்படுத்தக்கூடாது என்று தெரிவிக்குமாறு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு திரு. எஸ். டி. ஆதித்தன் அவர்களும் வரவேற்றிருக்கிறார்கள். அதற்காக நான் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆதித்தன் அவர்கள் 'சக்ஸஷன் சர்டிபிகேட்' வாங்குவதைப்பற்றிச் சொன்னார்கள். சக்ஸஷன் சர்டிபிகேட் என்பது தன்னுடைய வாரிசு உரிமையை நிலைநாட்டிக்கொள்வதற்கு, உண்மையான வாரிசுதானா, அதை வாங்குவதற்கு உரிமை உண்டா என்பதைப் பற்றியது. அது தனியான பிரச்சினை. இந்த ஸ்டாம்ப் டூட்டி பற்றியது அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் நிலம், கட்டிடம் முதலிய வகைகளைப்பற்றி அக்ரிமெண்ட் எழுதிக்கொள்வதை ஏன் இதில் கொண்டு வரவில்லை என்று கேட்டார்கள். அதற்கு ஏற்கெனவே புரொவிஷன் இருக்கிறது.

Any document or agreement entered into is liable to stamp duty

என்று இப்பொழுது இருக்கிற சட்டத்திலேயே ஸ்டாம்ப் டூட்டி உண்டு என்று இருக்கிறது. இப்பொழுது ஃபார்வேர்டு கான்ட்ராக்ட், ரெடி டெலிவரி கான்ட்ராக்ட் போன்றவைகளுக்கு நம்முடைய சட்டத்திலே விதிவிலக்கு அளித்திருக்கின்ற காரணத்தினால், அவை ஸ்டாம்ப் டூட்டிக்குக் கட்டுப்படாமல் இருக்கின்றன. பாம்பே ஆக்டிலே அவர்கள் ஏற்கெனவே சட்டத்தைத் திருத்தி, அக்ரிமெண்ட் அல்லது மெமோராண்டம் ஆஃப் அக்ரிமெண்ட் போன்றவைகளுக்கு ஸ்டாம்ப் கட்டணம் விதிக்கலாம் என்று விதிமுறை வைத்திருக்கிறார்கள். அதைப்பின்பற்றி நாமும் கட்டணம் விதிக்கலாம் என்று அரசு தீர்மானித்திருக்கிறது. இதில் எவ்வளவு வருமானம் வரும் என்று ஒரு பிரச்சினையை எழுப்பலாம். இப்பொழுது எக்ஸம்ப்ஷன் ஆகியிருக்கிற காரணத்தாலே, இதை விவரமாகச் சொல்ல முடியவில்லை என்றாலும், இதுபோன்ற அக்ரிமெண்ட் அல்லது மெமோராண்டம் ஆஃப் அக்ரிமெண்ட் போன்றவைகளையெல்லாம் ஸ்டாம்ப் டூட்டிக்குக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. சட்டத்தின்மூலம் அரசாங்கத்திற்குக் கிடைக்கக்கூடிய கட்டணம் வசூலாகிறது என்று கருதி, இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

1974 ஏப்ரல் 10]

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவையின் முன் உள்ள பிரச்சினை :

"சட்டப்பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1974-ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 11/1974) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பரிந்துரை எதுமில்லை.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

"சட்டப்பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1974 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ் நாடு திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/1974) திருப்பி அனுப்பப்படவேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவையின் முன் உள்ள பிரச்சினை :

"சட்டப்பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1974-ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ் நாடு திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/1974) திருப்பி அனுப்பப்படவேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது